புஸ்தகம்-4 அத்தியாயம்-1

எர்தாம்டனில் கோடை ஆரம்பித்துவிட்டது. கதிரவனின் ஒளிபொருந்திய கிரகணங்கள் மலை வழியே புகுந்து தன் ஒளியான முகத்தை கீழ்த்திசையில் காட்ட ஆரம்பித்து, கீழ் நோக்கி வருவதில் ஒருமகிழ்ச்சி. ஆனால், விளையாட்டு மைதானத்திலோ தெருக்களிலோ ஒரு குழந்தையையும் கண்ணில் காணோமே! ஆம் எல்லோரும் கோடைவிடுமுறையைக் கழிக்கும் திட்டத்திலும், பெற்றோர்கள் அதிலும், இருவரும் வேலைபார்பவர்கள் கோடை வகுப்புகளில் சேர்த்துவிடும் ஆர்வத்திலும் இருந்தார்கள். அருணுக்கும் இதேமாதிரி அநேக கோடைவிடுமுறை அனுபவம் இருந்தது. ஆனால் இந்த வருடம் வித்தியாசமாக இருக்கப் போகிறது. அருணின் மாமா, அத்தை குடும்பத்துடன் வரப்போகிறார்கள். ஒரு மாதம் முழுவதும் அவர்களுடனும், அவர்கள் பையன் ---- மற்றும் பெண் அனுவுடனும் கழிக்கப் போகிறார்கள்.

அருண் தன் அம்மாவிடம் கேட்டான், 'அம்மா, அவர்கள் எப்பொழுது வருகிறார்கள்?'

அருண் படுக்கையில் இருந்து எழுந்த கணத்திலிருந்து கேட்க ஆரம்பித்து விட்டான். ஆர்வத்துடன் அவர்களை எதிர்பார்த்து நாட்களை எண்ணிக்கொண்டிருந்தான். இந்த வருகை எர்தாம்டனுக்கு முதல் முறை, அதுவுமின்றி அதுவுமின்றி இங்கிலாந்திலிருந்து வெளியே புறப்படுவதும் முதல் முறை. ஆகையால் அருண் அவர்களுடன் பேஸ்பால், பாஸ்கட்பால் விளையாடுவதில் மிகுந்த துடிப்புடன் இருந்தான்.

'யாரைக் கேட்கிறாய், கண்ணா?'

'மாமா குழந்தைகளை, அம்மா.'

'ஓ, என் அண்ணன் குடும்பத்தை கேட்கிறாயா?' கீதா அவனைச் சீண்டினார்.

அம்மா நல்ல மூடில் இருப்பதைப் புரிந்து கொண்ட அருண் தானும் தன் பங்கிற்குச் சொன்னான். 'இல்லை, என் மாமன் மக்களும் அவர்கள் குடும்பமும் இங்கிலாந்திலிருந்து வருவதைப் பற்றி.'

'நீ மிகவும் துடிப்புடனும், ஆர்வத்துடனும் இருக்கிறாய் போல?'

'ஆமாம், அம்மா.'

'பக்கரூவிடம் சொல்லிவிட்டாயா? அவனும் உன்னைவிட ஆவலுடன் இருக்கிறான்.'

'ஆமாம், அம்மா.'

கீதா ஹாலில் இருந்த கடிகாரத்தைப் பார்த்தார். அவருக்கு கிடைத்த தகவல் படி, அண்ணன் மதியம் வந்து சேர்வதாக இருந்தது. அதற்கு இன்னும் நேரம் இருந்தது.

'அம்மா, அரவிந்தும், அனுவும் என்னுடன் பேஸ்பால் விளையாடுவாங்க இல்லையா? இங்கிலாந்தில் பேஸ்பால் விளையாட்டு இல்லையே அம்மா?'

அதைக் கேட்டதும் தான் தாமதம், உடனே பக்கரூ மாடிக்கு வந்து தன்னுடைய வாயில் பேஸ்பாலை கவ்விக்கொண்டு வந்தது. பக்கரூவிற்கு அருணுடன் வளையாட வேண்டும் என்று காட்ட பந்தை கீழே போட்டது. கீதா சத்தமாக சிரித்தார்.

'பார்தாயா அருண், பக்கரூவிற்கு விளையாத விருப்பம். உன் மாமன் மக்களை நம்மை மாதிரியே மாற்றி விடுவான்.'

அதே சமயம் யாரோ living room-ல் வருவதைப்போல் ஓசை கேட்டது. அந்த வீட்டில் இன்னும் ஒருவர் தான் இருக்கிறார். அது யார் என்று கீதாவிற்குத் தெரியும்.

சாமான்களை நகத்தும் சத்தம் கேட்டதும் கீதா என்ன நடக்கிறது என்று புரிந்து கொண்டார்.

'அப்பா, நீங்கள் சுத்தம் செய்கிறீர்களா? எப்போதிலிருந்து இந்த மாதிரி நடக்குது?' என்று அருண் கேட்டான்.

பக்கரூவும் அதன் பங்கிற்குச் குலைத்து தன் கேள்வியைக் கேட்டது. சற்று கழித்து, ரமேக்ஷ தவிர அனைவரும் ஹாலிற்கு வந்தார்கள். ரமேக்ஷ மும்முரமாக சுத்தம் படுத்தும் வேலையில் தன்னை மூன்று ஜோடிக் கண்கள் வியப்புடன் பார்த்துக் கொண்டிருப்பதை அறியாமல் ஈடுபட்டிருந்தார்.

'அப்பா?'

'என்ன கண்ணா?'

'பௌ பௌ,' இது பக்கரூ தரப்பிலிருந்து.

ரமேக்ஷ T.V பெட்டியிலிருந்த தூசைத் துடைத்து, படங்களை சரி செய்து, காபி மேஜையில் இருந்து வேண்டாத பொருட்களை அகற்றி, வேலையில் மிக மும்முரமாக இருந்தார். கீதா அருணைப் பார்க, அவன் தோளைக்

குலுக்கிக் கொண்டான். சிறிது நிமிடங்களில் ரமேக்ஷ் கீதா பக்கம் திரும்பினார்.

“My lovely wife, may I have a cup of tea?” சுத்தமான British உச்சரிப்பில் ரமேக்ஷ் கேட்டார்.

அருணுக்கு அவனது அப்பா அவ்வாறு British உச்சரிப்பில் கேட்டது புதுமையாக இருந்தது. கீதாவாவது அடிக்கடி வேறொறு மொழி உச்சரிப்பை உபயோகப்படுத்துவார், பெரும்பாலும் அருணுக்கு கதைப் புத்தகம் படிக்கும் போது.

“Arun my boy, do you want a lolly? Everything is honky-dory. Isn’t it?” ரமேக்ஷின் மாறுபட்ட ஆங்கில உச்சரிப்பு பக்கரூவிற்கும் பதிதாக இருக்க அது குழப்பத்துடன் பார்த்தது.

’அப்பா, உங்க British accent அம்மா எனக்கு படிக்கும் போது சொல்வதை விட ரொம்ப நல்ல இருக்கு.’ ரமேக்ஷின் பேச்சில் ஆச்சிரியப்பட்உ அருண் சொன்னான்.

’இருக்காதா என்ன? நான் உன் அம்மாவோடு இந்த எர்தாம்டன் வருவதற்கு முன்னே நான் Derbyshire-ல் ஒரு Count ஆக இருந்தேனே. அங்கே எல்லோரும் என்னை Count Ramesh என்று தானே அழைப்பார்கள்.’

கீதா ரமேக்ஷின் அர்த்தமுள்ள பேச்சை ரசித்தார். எப்பொழுதுமே கேலியும் கிண்டலுமாக இருக்கும் ரமேக்ஷின் மனோபாவம் கீதாவிற்கு மிகவும் பிடிக்கும்.

கீதாவும் தன் ஆங்கில புலமையைக் கொஞ்சம் காட்டிக் கொள்ள விரும்பினார். அவரும் ஏதோ சொல்ல, அருண் சரியான சமயத்தில் பேச்சில் நுழைந்து, ‘நம்ம வழக்கமான மொழியில் பேசுவோமே?’ என்று சொன்னான்.

அப்பொழுது கீதாவிற்கு ஒரு text message வந்தது, அவரது செல்போனில்.

’நாங்கள் ஒரு traffic jam-ல் மாட்டி இருக்கிறோம். வருகை தாமதமாகிறது.’

கீதா பதில் அடிக்கும் போது, அருண் ஆரவத்துடன் பார்த்தான்.

’மாமா, ஒரு traffic jam-ல மாட்டிக்கிட்டாரு கண்ணா. அதான் லேட்டாகுது.’

'அம்மா, எனக்கு இப்பவே அவங்கள பார்க்கணும், அம்மா,' என்று அருண் அழுதான்.

ரமேக்ஷ் தன் பாட்டிற்கு சுத்தம் செய்யத் தொடங்க, கீதா அருணிடம் அவனது அறையை சுத்தம் செய்து அவனது cousinகளுக்கு ஏற்பாடு பண்ண சொன்னார்.

'அப்பா, நான் அரவிந்த், அனு, இரண்டு பேரோடும் ஒரே ரூமில் தூங்க ஆசைப்படரேன்.'

'அதில் பிரச்சினையே இல்லை. ஆனால், இது பற்றி அனுவுடன் முதலில் கேட்க வேண்டும். You know, she is a girl," என்றார் ரமேக்ஷ்.

"Oh, those girls!" என்று அருண் முணுமுணுத்தான்.

கீதாவிற்கு செல்போனில் அழைப்பு வர, அதை எடுத்தார்.

'ஹலோ?'

'நாங்க வந்தாச்சு, கீதா.'

எல்லோரும் வாசலைப் பார்க்க, அங்கே அரவிந்தும், அனுவும் தங்கள் பெற்றோருடன் நிற்பதைப் பார்த்தார்கள்.

--- முடிவு ---